# சாதாரணக்கூட்டம்

பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் சாதாரணக்கூட்டம் 2018 ம் ஆண்டு மே மாதம் 30 ஆம் நாள் புதன் கிழமை காலை 11.00 மணிக்கு பல்லடம் நகராட்சி அலுவலக நகர மன்றக்கூடத்தில் நடைபெற உள்ளது.

**தனி அலுவலர்,**
**பல்லடம் நகராட்சி**

**பொருள் : 1**

பல்லடம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் கல்லூரிகள், பள்ளிகள் மற்றும் அதில் பணிபுரியும் பணியாளர்கள், திருமண மண்டபங்கள், தொழிற்சாலைகள், திரையரங்குகள், மதுபானக்கடைகள், தங்கும் விடுதிகள், வணிகம் சார்ந்த கடைகள், அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அரசு அலுவலர்கள், அரசு சார்ந்த மற்றும் அரசு சாராத நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 12503/2018/ஆர்1 நாள் 21.05.2018 ல் தெரிவித்துள்ளபடி தொழில்வரியை 25 % குறையாமலும், 35 % மிகாமலும், மேலும் ஒரு வருடத்திற்கு ரூ.2500 /- க்கு மிகாமலும், 5 ஆண்டுகளுக்கு மறுநிர்ணயம் செய்ய அரசாணை எண் (Ms) No : 11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 12.01.1999 ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, ஏற்கனவே இந்நகராட்சியில் 01.10.2013 ல், தொழில்வரி உயர்வு செய்யப்பட்டு தற்பொழுது 30.09.2018 அன்றுடன் 5 ஆண்டுகள் முடிவடைவதால் 01.10.2018 முதல் 25 % தொழில்வரியை (2018 -19 இரண்டாம் அரையாண்டு) கீழ்கண்ட பட்டியலில் உள்ள விபரப்படி உயர்த்திகொள்ளவும், மாவட்ட அளவிலான தினசரி நாளிதழ் மற்றும் மாவட்ட அரசிதழில் தொழில்வரி உயர்வு செய்ய வெளியிடவும், அதற்குண்டான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எ | அரையாண்டிற்கு வருமானம் | 01.10.2013 முதல் தொழில்வரி பிடித்தம் செய்யப்பட்ட விபரம் | 01.10.2018 முதல் தொழில்வரி பிடித்தம் செய்யப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1 | ரூ .21000 /- வரை | – | – |
| 2 | ரூ20001 முதல் ரூ .30000 /- வரை | ரூ.125 / - | ரூ.156 /- |
| 3 | ரூ30001 முதல் ரூ .45000 /- வரை | ரூ.305 /- | ரூ.381 /- |
| 4 | ரூ.45001 முதல் ரூ .60000 /- வரை | ரூ.610 /- | ரூ.763 /- |
| 5 | ரூ.60001 முதல் ரூ .75000 /- வரை | ரூ.915 /- | ரூ.1144 /- |
| 6 | ரூ.75001 முதல் அதற்கு மேலும் | ரூ.1220 /- | ரூ.1250 /- |

**அலுவலக குறிப்பு**

1.ஏற்கனவே நிர்ணயம் செய்துள்ள தொழில்வரியை 25 % க்கு குறையாமலும், 35 % க்கு மிகாமலும், ஒரு அரையாண்டிற்கு ரூ.1250/ -க்கு மிகாமல் உயர்வு செய்ய மன்றம் முடிவு செய்யலாம்.

2.தினசரி செய்திதாள் மற்றும் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யவும் , அதற்கான செலவு தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் : 2</u>**

இந்நகராட்சி குடிநீர் விநியோகம் தொடர்பாக Zonal map மற்றும் திடக்கழிவு மேலாண்மை தொடர்பாக வார்டு வாரியாக Route Map போன்ற வரைபடங்களை CAD ல் தயாரிக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.00 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139 /2018/இ1)

**<u>அலுவலககுறிப்பு:</u>**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 3</u>**

பல்லடம் நகராட்சியில் தூய்மை இந்தியா இயக்கம் – திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பல்லடம் நகரப்பகுதியில் சேகரம் ஆகும் மக்கும் கழிவுகளை உரமாக்கும் பொருட்டு மாதப்பூர் ஊராட்சியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் சிறிய அளவிலான உரக்கிடங்கு மற்றும் கீழ்கணும் பணி மேற்கொள்ள திட்ட பிரேரணைகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறுவதற்கு சமர்ப்பிக்க தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 316 /2018/இ1)

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மாதப்பூர் ஊராட்சியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் சிறிய அளவிலான உரக்கிடங்கு அமைத்தல் | 60.00 |
| 2 | பல்லடம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்ட முதல் நிலை சேகரிப்பிற்கு மின்ஆக்கி மூலம் இயங்கக் கூடிய 3 சக்கர வாகனம் 15 எண்ணிக்கையில் வாங்குதல் | 27.50 |
| | **மொத்தம்** | **87.50** |

**<u>அலுவலககுறிப்பு:</u>**

1. மேற்படி தூய்மை இந்தியா இயக்கம் – திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் 2018–2019ன் கீழ் அரசு மானியம் பெற்று பணி மேற்கொள்ள தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 4</u>**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்க்காணும் பகுதிகளில் உள்ள பழுதடைந்த சாலைகளை புதுப்பிக்க சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் (TURIP 18-19) 2018–2019ன் கீழ் ரூ.300.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ள திட்ட பிரேரணைகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறுவதற்கு சமர்ப்பிக்க தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | பல்லடம் நகராட்சி வார்டு எண்:02,03,07,08,10,12,13,14,18ல் உள்ள சேடபாளையம் பகவதியம்மன் நகர், அரிசன காலனி, தெற்குபாளையம் முதல் நாரணாபுரம் வரை, இராயர்பாளையம் மயானம் செல்லும் வழி, விநாயகர் கோவில் வீதி, பனப்பாளையம் பாவடித் தோட்டம், காளியப்பா நகர், சரஸ்வதி நகர், எஸ்.பி.டி. டெக்ஸ் ரோடு, முல்லை நகர், ராம் நகர், வளர்மதி சர்வீசன் ஸ்டேசன், ஏ.வி.எம். நகர், யுவராணி நகர் மற்றும் எஸ்.டி.எம் மில் ரோடு ஆகிய பகுதிகளில் உள்ள பழுதடைந்த தார்சாலைகளை பேவர் மிசின் கொண்டு தார்சாலைகள் புதுப்பித்தல். (சிப்பம்–I) | 4.486 | 150.00 |
| 2 | பல்லடம் நகராட்சி வார்டு எண்: 11ல் உள்ள டி.எம்.எஸ் நகர், ஸ்ரீ நகர், ஆண்டாள் நகர், மகாலட்சுமி அவென்யூ, இன்ட்–ராயல் விலா, ஸ்கூல் ரோடு, திலீபன் நகர் ஆகிய பகுதிகளில் உள்ள பழுதடைந்த தார்சாலைகளை பேவர் மிசின் கொண்டு தார்சாலைகள் புதுப்பித்தல். (சிப்பம்–II) | 2.972 | 150.00 |
| | **மொத்தம்** | **7.458** | **300.00** |

(ந.க.எண்: 313 /2018/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் 2018–2019ன் கீழ் அரசு மானியம் பெற்று பணி மேற்கொள்ள தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 5**

பல்லடம் நகராட்சியின் 2016 -2017 ஆம் ஆண்டு ஆண்டு கணக்குகள் சன் டேட்டா காம் ( எஸ்.தாமரைச்செல்வி) கோவை என்ற நிறுவனத்தின் மூலம் முடிக்கப்பட்டு தணிக்கையின் போது ஆண்டு கணக்குகள் குறித்த அனைத்து ஆவணங்களும் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வருடா வருடம் மேற்படி நிறுவனத்தின் மூலம் முடிக்கப்பட்டு அதற்கான கட்டணம் வழங்கப்பட்டுள்ளது அதன் படி 2016–2017 ஆம் ஆண்டும் சன் டேட்டா காம் ( எஸ்.தாமரைச்செல்வி ) கோவை என்ற நிறுவனத்தால் கணக்கு முடிக்கப்பட்டு தணிக்கைக்கு சமர்ப்பித்து தணிக்கை நிறைவு பெற்றுள்ளது. அதற்கான கட்டணத்தொகை ரூ. 45000 /- மற்றும் இந்நகராட்சியின் New Accounting System முறைப்படி 2013 - 2014 to 2017 -2018 வரையிலான பட்ஜெட் தயாரித்து வழங்கியதற்கான கட்டணத்தொகை ரூ.15000 /– ம், ஆக மொத்தம் கட்டணத்தொகை ரூ. 60,000/– ம் வழங்குமாறும், தனது 24.04.2018 ஆம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார். எனவே அதற்காகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**<u>பொருள் : 6</u>**

பல்லடம் நகராட்சி பயன்பாட்டிற்கு 2018 -19 ஆண்டிற்கு பொது சுகாதாரபிரிவிற்கு தேவைப்படும் தளவாட சாமான்களை வாங்க ரூ.4.00 இலட்சத்திற்கு நகர்மன்றத் தீர்மான எண் 42 நாள் 28.03.2018 ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தளவாட சாமான்களை வாங்க ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனத்தாரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

1. ஸ்ரீ பாரத் அன்ட்கோ, கோயம்புத்தூர்.
2. வாளதி பைப் கார்ப்ரேசன், கோயம்புத்தூர்.

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1 ல் உள்ள ஸ்ரீ பாரத் அன்ட்கோ, கோயம்புத்தூர். அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

ஸ்ரீ பாரத் அன்ட்கோ, கோயம்புத்தூர் அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி வழங்கலாம்.

**<u>பொருள் : 7</u>**

பல்லடம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தி வரும் முதல் நிலை சேகரிப்பிற்கான தள்ளுவண்டிகளில் உள்ள பிளாஸ்டிக் குப்பை சேகரிக்கும் தொட்டியானது குறைந்த அளவில் உள்ளதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், திடக்கழிவு மேலாண்மை பணியினை மேம்படுத்தவும், 200 எண்ணிக்கையில் குப்பை தொட்டியினை ரூ.60000 /- செலவில் வாங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் : 8</u>**

பல்லடம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில், மழைநீர் வடிகாலில் உள்ள கொசுப்புழுக்களை ஒழிக்க தேவையான கைப்பம்புகளை பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் பொது மக்களை தொற்று நோயிலிருந்து பாதுகாக்கும் பொருட்டும் 20 எண்ணிக்கையிலும் மற்றும் 4 சிறிய கொசுப்புகை இயந்திரம் வாங்க மொத்தம் ரூ. 3,50,000 /-க்கு வாங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் : 9</u>**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலின் கீழ் பயனாளிகள் பயன் பெறும் வகையில் . கீழ்காணும் பயனாளிகளை வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளோர் பெயர் பட்டியலில் சேர்த்து BPL எண் வழங்ககோரி வழங்கிய கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் , பயனாளிகள் பட்டியல் தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | பெயர் மற்றும் முகவரி | பாலினம் |
|---|---|---|---|
| 1 | 13 | லட்சுமி<br>க/பெ பழனிச்சாமி<br>5, கிருஷ்ணப்ப ஆசாரி வீதி,<br>என்.ஆர்.டி, காம்ப்ளக்ஸ் பின்புறம்<br>திருச்சி மெயின் ரோடு<br>பல்லடம் (வ), திருப்பூர் (மா) | பெண் |
| 2 | 15 | கே.எம்.சுப்பிரமணியம்<br>த/பெ மயில்சாமி<br>15/45, முதல் வீதி பயர் சர்வீஸ்<br>பின்புறம்அண்ணா நகர்,<br>பல்லடம் திருப்பூர் 641 664 | ஆண் |

**அலுவலக குறிப்பு**
மன்றம் ஏற்கலாம்.

**பொருள் : 10**

பல்லடம் நகராட்சியில் உள்ள 9 குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளில் பொருத்தப்பட்டுள்ள குளோரினேசன் இயந்திரத்திற்கு ஒரு வருடத்திற்கு தேவையான திரவ குளோரின் சப்ளை செய்தல் மற்றும் இயந்திரங்கள் ஆண்டு பராமரிப்பு செய்யும் பணிக்கு 16.05.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. திருவாளர்கள்.ஸ்ரீ ராஜகணபதி<br>இன்ஜினியரிங் வோர்க்ஸ்,சென்னை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.83% குறைவு |
| 2. திருவாளர்கள்.ஸ்ரீ சபரி<br>இன்ஜினியரிங் , சென்னை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.65% அதிகம் |

(ந.க.எண்: 117/2017/இ1)

**அலுவலக குறிப்பு :**

1. இப்பணிக்கு நகரமன்றம் தனது 28.03.2018 தேதியிட்ட 65 ஆம் எண் தீர்மானத்தில் மதிப்பீடு ரூ.5,00,000/-க்கு அனுமதி வழங்கி உள்ளது.

2. வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 0.83% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள திருவாளர்கள்.ஸ்ரீ ராஜகணபதி இன்ஜினியரிங் வோர்க்ஸ், சென்னை அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 11**

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2017–18ன் கீழ் வார்டு எண்:14 என்.ஜி.ஆர் சாலையில் சந்தைப்பேட்டை முன்புறம் உயர்மின் கோபுர விளக்கு அமைக்கும் பணிக்கு 23.05.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1.திருவாளர்கள்.வின் சோலார் இன்ட்ரஸ்டிரி, இராசிபுரம், நாமக்கல் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.01 % குறைவு |
| 2. திருவாளர்கள்.ஸ்டார் என்டர்பிரைசஸ், இராசிபுரம், நாமக்கல் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.03% அதிகம் |

(ந.க.எண்:190/2018/இ1)

**அலுவலக குறிப்பு :**

1. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண்: 2820/2017/அ6 நாள்: 20.03.2018ல் ரூ.9,00,000/க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2. வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.01% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள திருவாளர்கள். வின் சோலார் இன்ட்ரஸ்டிரி, இராசிபுரம், நாமக்கல் நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 12**

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள கட்டணக் கழிப்பிடத்தில் பலத்த காற்றில் முன்தகர கூரை சேதமடைந்ததால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139 /2018/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர, அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு15ன் கீழ் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.டி.ஆர். கன்ஸ்ரக்ஸன் அவர்கள் மூலம் மதிப்பீட்டு விகிதத்தில் பணியை மேற்கொள்ள ஒப்படைப்பு பணியாக பணியை மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கியதை அனுமதிக்கலாம்.

**பொருள் : 13**

பல்லடம் நகராட்சி வார்டு எண்:08,11 ஆகிய பகுதிகளில் உள்ள மேல்நிலைத் தொட்டிகளின் வால்வு தொட்டிகளுக்கு கான்கிரீட் மூடி அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.30,000/– வருவாய் நிதியில் மேற்கொள்ள தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139 /2018/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2016 – 2017 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்ப்பதற்கும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணியை திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரா் அவர்களிடம் ஒப்படைப்பு பணியாக பணியை மேற்கொள்ள தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 14**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு பில்லூர் அத்திக்கடவு கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. 2018–19 ஆம் நிதியாண்டல் விநியோகிக்கப்படும் குடிநீரில் குளோரின் அளவினை ஆய்வுக் கூடத்தில் பரிசோதனை செய்து அறிக்கை பெற ஆய்வுக் கட்டணமாக ரூ.12,000/– ''நிர்வாக அலுவலர் (TWAD) ETK Circle-Erode '' அலுவலகத்திற்கு செலுத்த தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139 /2018/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 15**

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான பல்லடம் வட்டம் மாதப்பூர் கிராமம் புல எண்: 872 நெ.காலை தீர்வை தரிசு பூமி மொத்த பரப்பான 3.88.5 (9.59 ஏக்கர்) நிலத்தினை உரக்கிடங்கு அமைக்க திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார். எனவே மேற்கண்ட இடத்தைச் சுற்றி சுமார் 900 மீட்டர் அளவிற்கு கம்பவேலி அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139 /2018/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 16**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:04 அரசு கலைக்கல்லூரி எதிர்புறம் , வார்டு எண்:08 திருப்பூர் ரோடு சந்திப்பு , வார்டு எண்:14 காவல் நிலையம் எதிர்புறம் ஆகிய இடங்களில் நவீன பயணியர் நிழற்குடை அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139 /2018/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 17**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:14 செட்டிபாளையம் ரோடு சந்திப்பு, வார்டு எண்:15 அண்ணாநகர் கோவை சாலை ஆகிய இடங்களில் நவீன பயணியர் நிழற்குடை அமைப்பதற்கு

தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6.60 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139 /2018/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 18**

பல்லடம் நகராட்சி வார்டு எண்:07 திருப்பூர் சாலை இராயர்பாளையம் பகுதியில் மையத் தடுப்பு விளக்குகள் அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139 /2018/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 19**

பல்லடம் நகராட்சி வார்டு எண்:11 பொள்ளாச்சி சாலை அரசு உயர்நிலைப்பள்ளி அருகிலிருந்து உடுமலைப் பிரிவு வரை மற்றும் வார்டு எண்:07 இராயர்பாளையம் மாரியம்மன் கோவில் அருகில் மையத் தடுப்பு விளக்குகள் அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139 /2018/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 20**

பல்லடம் நகராட்சி வார்டு எண்:13 மேற்கு பல்லடம் அஙகன்வாடி மையக் கட்டிடத்தை சுற்றிலும் சுற்றுச்சுவர் மற்றும் கிரில் கதவு அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.00 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139 /2018/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 21**

நகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடங்களை சுற்றி கம்பிவேலி அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6.00 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139 /2018/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 22**

பல்லடம் நகராட்சி வார்டு எண்:05 மங்கலம் சாலையில் நெடுஞ்சாலைத் துறையினர் ஆக்கிரமிப்புகளை அகற்றி சாலையை விரிவாக்கம் செய்து வருவதால் சாலையின் நடுவில் உள்ள குடிநீர் குழாய்களை மாற்றியமைக்க தெரிவித்துள்ளனர். இதனால் சாலையின் இருபுறமும் புதியதாக பகிர்மான குழாய்கள் மற்றும் விநியோக மெயின் குழாய்களை பதிக்க ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139 /2018/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 23**

பல்லடம் நகராட்சியில் தூய்மை இந்தியா இயக்கம் – திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பல்லடம் நகரப்பகுதியில் சேகரம் ஆகும் மக்கும் கழிவுகளை உரமாக்கும் பொருட்டு மாதப்பூர் ஊராட்சியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் சிறிய அளவிலான உரக்கிடங்கு அமைக்கும் பணியை மேற்கொள்ள திட்ட பிரேரணைகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறுவதற்கு சமர்ப்பிக்க தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | மாதப்பூர் ஊராட்சியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் சிறிய அளவிலான உரக்கிடங்கு, கழிப்பிடம் மற்றும் சாலை வசதி அமைக்கும் பணி | 63.00 |
| | **மொத்தம்** | **63.00** |

(ந.க.எண்: 316 /2018/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. மேற்படி தூய்மை இந்தியா இயக்கம் – திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–2019ன் கீழ் அரசு மானியம் பெற்று பணி மேற்கொள்ள தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

தனி அலுவலர்
பல்லடம் நகராட்சி